

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் அந்தியூர் இரா.நித்தினுக்குச் சொந்தமான “நந்திதா கார்ஸ்” வீல் அலைன்மென்ட் ஷோ ரூமை முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் கஸ்தூரி வரவேற்பில் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துச்சாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.சுப்ரமணியம், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை அருகே பேருந்திலிருந்து மாணவிகளை கீழே தள்ளிவிட்டது

# மனிதநேயம் அற்ற கொடூரச் செயல்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**சென்னை, செப். 3-**

**புதுக்கோட்டை அருகே பேருந்திலிருந்து பள்ளிச் செல்லும் மாணவிகளை கீழே தள்ளிவிட்டது மனிதநேயம் அற்ற கொடூரச் செயல். இதற்கு காரணமானவர்கள் மீது உடனடியாக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

புதுக்கோட்டை அருகே பள்ளி செல்லும் பழங்குடியின மாணவிகள், அரசு பேருந்திலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு, படுகாயமடைந்த சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. பேருந்தில் கூட்டம் அதிகமாக இருப்பதாகக் கூறி, நடத்துநரும் ஓட்டுநரும் மாணவிகளை பேருந்திலிருந்து இறக்கிவிட முயன்றதும், மறுத்த மாணவிகளை கீழே தள்ளிவிட்டதும் மனிதநேயம் அற்ற கொடூரச் செயல்.

கல்வி கற்கச் செல்லும் குழந்தைகள் மீதே தீண்டாமைக் கொடுமையை நிகழ்த்தும் அளவுக்கு, சாதி என்னும் மனநோயால் இச்சமூகம் இன்னும் பாதிக்கப்பட்டிருப்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய அவலம்.

சிகிச்சை பெற்று வரும் மாணவிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு வழங்குவதோடு, உரிய விசாரணை நடத்தி, இச்சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது எந்தவித சமரசமுமின்றி உடனடியாக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட செங்குன்றம் பேருந்து நிலைய பணிகளை

# த.வெ.க. அரசு கிடப்பில் போடலாமா..?

## பொதுமக்கள் வேதனை!

சென்னை,செப்.3-

சென்னை செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையத்தில் இருந்து சென்னை வள்ளலார் நகர், பாரிமுனை, கோயம்பேடு, கிண்டி, தாம்பரம், அம்பத்தூர், பூந்தமல்லி, திருவள்ளூர், திருவொற்றியூர், பழவேற்காடு, ஊத்துக்கோட்டை, பொன்னேரி மற்றும் திருவொற்றியூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு நூற்றுக்கு மேற்பட்ட சென்னை மாநகர பேருந்துகள் இயக்கப்படுகிறது. பேருந்து நிலையத்தில் நிழற்குடை இல்லாததால் தினசரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் மழை, வெயில் காலங்களில் அவதிப்பட்டு வந்தனர்.




இதுகுறித்து பொதுமக்கள் வைத்து கோரிக்கையையடுத்து, கடந்த திமுக ஆட்சியில் செங்குன்றம் பேரூராட்சி சார்பில் கலைஞர் நகர் புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடி 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிழற்குடை அமைக்க பூமி பூஜை கடந்த அக்டோபர் மாதம் 2ம் தேதி பேருந்து நிலைய வளாகத்தில் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார் தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி சார்பில் கூடுதல் நிதியாக 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது.

இந்தநிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், கடந்த 4 மாதமாக கட்டுமான பணிகள் முடங்கியுள்ளது. இதனால் இங்கு வரவேண்டிய பேருந்துகள் அனைத்தும் அருகில் உள்ள ஜிஎன்டி சாலையின் இரண்டுபுறமும் நிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, மந்தகதியில் நடைபெற்று வரும் பேருந்து நிலைய வளாக பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என பயணிகள் மற்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

“செங்குன்றம் பேருந்து நிலையத்தில் இருந்து திருவள்ளூர் கூட்டுச்சாலை நேதாஜி சிலை வரை உள்ள ஜிஎன்டி சாலையில் இரண்டு பக்கங்களிலும் மாநகர பேருந்துகள் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மற்ற வாகனங்கள் பாதிக்கப்பட்டு வருகிறது. செங்குன்றம் போக்குவரத்து துறை சார்பில், பல பேருந்துகளுக்கு அபராத விதிக்கப்பட்டு வருகிற சூழ்நிலையில் மீண்டும், மீண்டும் மாநகர போக்குவரத்து ஓட்டுநர்கள் மீண்டும் சாலை விதிமுறைகளை மீறி சாலைகளின் 2 பக்கங்களிலும் நிறுத்திவிடுகின்றனர். இதனால் காலை, மாலை நேரங்களில் இந்த சாலை வழியாக செல்லும் வாகன ஓட்டிகள், பொது மக்கள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதுகுறித்து மாநகர போக்குவரத்து கழக உயரதிகாரிகள் நடவடிக்கை எடுத்து மாநகரப் பேருந்துகளை புழல் ஏரி மதகு அருகே உள்ள தற்காலிக பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும்’ என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மொழிப்போர் தியாகி, கழக மூத்த முன்னோடி கோவை மு.மா.சண்முகசுந்தரம் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர்கள் தொண்டமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு), பொதுக்குழு உறுப்பினர் மு.மா.ச.முருகன் ஆகியோர் முன்னிலையில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எம்.தண்டபாணி, கழக தீர்மான குழு உறுப்பினர்கள் நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலசுப்ரமணியம், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிகண்டன், கார்த்திகேயன், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் வ.ம.சண்முகசுந்தரம், பசுபதி, ஆர்.எம். சேதுராமன், பாக்கியராஜ், கே.எம்.ரவி, சிவக்குமார், சிவராமன், தேவசீலன், ஏ.எஸ்.நடராஜ், கோவை லோகு, பாரதிநகர் செல்வராஜ், இராமச்சந்திரன், கோவை சம்பத், ஒன்னப்பன் உள்பட வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




### கிணத்துக்கடவு - பொள்ளாச்சியை

# மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும்!

## ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு – கே.ஈஸ்வரசாமி எம்.பி. மனு!

பொள்ளாச்சி, செப். 2 -

கிணத்துக்கடவு பொள்ளாச்சி பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும் என பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர், ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்வுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது :-

கிணத்துக்கடவு பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மீண்டும் மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இந்த கோரிக்கை புவியியல் அமைப்பு, நிர்வாக வசதி மற்றும் பயணிகளின் போக்குவரத்து ஆகியவற்றை அடிப்படையாக கொண்டதாகும்.

இந்த கோரிக்கையை ரயில்வே நிர்வாகத்திடம் பலமுறை முன்வைத்த போது, ரயில்வே கோட்டங்களை உருவாக்குதல், மறுசீரமைத்தல் அல்லது அதன் நிர்வாக எல்லைகளை மாற்றுதல் என்பது கொள்கை சார்ந்த முடிவு. இது குறித்த இறுதி முடிவை ரயில்வே வாரியமும் ஒன்றிய அரசும் எடுக்க வேண்டும் என்றும் கூறி வந்தனர். இந்நிலையில், மங்களூரு பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மைசூர் ரயில்வே கோட்டத்துடன் இணைக்க ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளதாக சமீபத்தில் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நிர்வாக அடிப்படையில் ஏற்கனவே உள்ள ரயில்வே கோட்டங்களின் நிர்வாக எல்லைகளை மறுபரிசீலனை செய்து மாற்றியமைக்க முடியும் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

எனவே, மங்களூரு பகுதியை பாலக்காடு கோட்டத்திலிருந்து பிரித்து வேறு ஒரு ரயில்வே கோட்டத்துடன் இணைக்க முடியும் என்ற நிலையில், அதே அடிப்படையில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியின் கோரிக்கையையும் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்.

மேலும், பொள்ளாச்சி பகுதி தமிழ்நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளுடன் நெருக்கமான புவியியல் மற்றும் பயணிகள் போக்குவரத்து தொடர்புகளை கொண் டுள்ளது.

இப்பகுதியை மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைப்பதன் மூலம் நிர்வாக வசதி மேம்படுவதுடன், பயணிகள் சேவைகள், ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி பணிகளை மேலும் சிறப்பாக ஒருங்கிணைக்க முடியும்.

மேலும், தமிழ்நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கிடையிலான பொதுமக்களின் பயணத் தேவைகளை யும் கருத்தில் கொள்ளும் போது, புவியியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியை மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைப்பது மிகவும் பொருத் தமானதாக இருக்கும். எனவே, கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க ரயில்வே அமைச்சரும், ரயில்வே வாரியமும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் கூறி உள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் தாம்பரம் மாநகராட்சியின் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் கடப்பேரி புலிக்கொரடு சாலை பணிகள் குறித்தும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் டாக்டர் எம்.வீரப்பனிடம் கலந்துரையாடினார்.